IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | SC.No. 20/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 3, PW 2 |
| Name | கணேஷ் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18th day of February 2025.

**18.02.2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

**நான் தற்சமயம் தேனலை கிராமத்தில் வசித்தும், நான் டாஸ்மார்க் கடையில் விற்பனை சிப்பந்தியாக பணி செய்கிறேன். அசா 1 ரவிக்குமாரின் தாயாரின் வீட்டிற்கு ஒரு வீடு தள்ளி எனது வீடு உள்ளது. இறந்து போன ருக்கு அசா 1ரவிக்குமாரின் தாயார் ஆவார். அவர் வீட்டில் தனியாக தான் வசித்து வந்தார். அவருடைய குழந்தைகள் வெளியூரில்**

இருந்தார்கள். ருக்குவின் கணவரும் இறந்துவிட்டார். அவர் இருதய நோயாளி ஆவார். 13.12.2021 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் எங்கள் வீட்டின் அருகில் இருக்கும் சரஸ்வதி என்பவர் என்னிடம் வந்து ரவிக்குமாரின் தாயார் அலைபேசியை எடுக்கவில்லை என்ற காரணத்தினால் ரவிக்குமார் சரஸ்வதிக்கு அழைத்து இந்த விவரங்களை சொன்னதாகவும் அதன் காரணமாக உதவி கோரி சரஸ்வதி இவ்விவரங்களை என்னிடம் தெரிவித்தார். உடனே நான் ருக்கு அவர்களின் வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது அவருடைய முன் வாசல் கதவு வெளியே தாழிடப்பட்டிருந்ததது. உடனே நான் அந்த கதவினை திறக்கும் பொருட்டு தள்ளி பார்த்தேன் அது திறக்கவில்லை. பின்னர், பின் வாசல் திறந்திருக்கிறதா என்று நான் சென்று பார்தத போது அது திறந்திருந்ததது, நான் உள்ளே சென்று பார்த்தேன். அப்போது ருக்கு முன் அறையில் படுத்திருந்தார். நான் அவரை அழைத்து பார்த்தேன். அவர் அசைவற்று கிடந்தார், தொட்டு பார்த்தேன் எவ்வித அசைவும் தெரியவில்லை. உடனே என் அம்மா மீனாட்சியிடமும், பக்கத்துவீட்டில் இருக்கும் சரஸ்வதியிடமும் தெரிவித்தேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டு ருக்கு இறந்துவிட்டார் என்றனர். பின்னர், ஊரில் இருந்த பொது மக்களுக்கு தகவல் கொடுத்தேன். எல்லோரும் வந்து பார்த்தார்கள். நான் அங்கு இருந்த சமயத்தில் ருக்குவின் வீட்டில் மின்சாரம் இல்லாமல் இருந்தது, ஆனால் பக்கத்து வீட்டில் மின்சாரம் இருந்த காரணத்தினால் ருக்குவின் வீட்டில் உள்ள மின் இனைப்பு பெட்டியை பார்த்த போது பிரதான ஸ்விச் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. பின்னர், நான் உடனே அதை மின்சாரம் இனைப்பு வரும் படி இயக்கி வைத்தேன். பின்னர், ருக்கு வீட்டில் அனைத்து மின் விளக்குகளும் எரிந்தன. அப்போது, ருக்குவின் உடலை நான் பார்த்த போது அவருடைய மூக்கில்

இருந்து ரத்தம் வெளியேறி இருந்தது, வலது பக்க கண்ணில் காயங்கள் காணப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்த எங்கள் கிராம பொது மக்கள் ருக்குவின் உடலில் எப்போதும் காணப்படும் கம்மல், மோதிரம் ஆகியவற்றை காணவில்லை என பேசிக்கொண்டார்கள். நான் உடனடியாக இறந்து போன ருக்குவின் மகனான ரவிக்குமாரின் மகனுக்க தொலைபேசி வாயிலாக இந்த தகவலை தெரிவித்தேன். பின்னர், சுமார் 4.00 மணியளவில்லை ருக்குன் மகன் ரவிக்குமார் வந்துவிட்டார். அப்போது இறந்து போன ருக்குவின் மகனும், ஊர் பொதுமக்களும் கூடி பேசி ருக்குவின் இறப்பில் சந்தேகம் இருப்பதால் போலிசார் வசம் புகார் கொடுக்கப்பட்டது. அவருடைய மகன் ரவிக்குமார் புகார் கொடுத்தார். போலிசார் இது சம்பந்தமாக விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- Ganesh/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Sentilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.